Registared as a News Paper in Sri Lanka பக்கங்கள் 06 விலை ரூபா 4-50

# ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (26 - 03 - 1991) செவ்வாய்க்கிழமை ஓசை: 36

## பல்கலை அனுமதியில் யாழ். இந்து சாதனை

(நல்லூர்)

மருத்துவம், பொறியியல் ஆகிய கற்கைநெறிகளுக்கு மொத்தம் 35 யாழ். இந்துக்கல்லூரி மாணவர்களுக்குப் பல்கலைக்கழக அனுமதி கிடைத்துள்ளது. 19 பேர் பொறியியலுக்கும், 16 பேர் மருத்துவத்துக்கும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். மருத்துவக்கற்கைநெறிக்கான தேர்வு முன்னைய யாழ். இந்து சாதனைகளை விடக்கூடியதாகும். (4 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயர் தாக்கப்பட்டமை மனிதஉரிமைமீறலாகும்

## பிரேமதாஸாவிற்கு யாழ். மறை மாவட்ட பொது நிலையாளர் கழகம் மகஜர்

(யாழ்ப்பாணம்)

மன்னார் ஆயர் அதிவண கலாநிதி தோமஸ் சௌந்தரநாயகம் சிறிலங்கா இராணுவத்தினரால் 16ஆம் திகதியன்று பிற்பகல் வவுனியாவில் வைத்துத் தகாத வார்த்தைகளால் நிந்திக்கப்பட்டதையும், தொடர்ந்து பலமுறைகள் நையப் புடைக்கப்பட்டதையும் வன்மையாகக் கண்டித்து யாழ். மறை மாவட்டப் பொது நிலையினர் கழகம் சிறிலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவுக்கு மகஜர் ஒன்றை அனுப்பியுள்ளது.

ஈஸ்ரர் திருவிழிப்பிற்காக, ஆயர் தனது காரில் கொண்டு வந்த பாஸ்கா மெழுகுதிரிகள் மீது சந்தேகம் கொண்டே இராணுவத்தினர் வவுனியா சர்வோதய சோதனைச் சாவடிக்கருகில் ஆயரைத் தாக்கினர்.

மன்னார் ஆயர்மேல் மேற்கொள்ளப்பட்ட இத்தாக்குதலானது அடிப்படை மனித உரிமை மீறல் சம்பவமாகும்.

நிராயுதபாணியான ஒருவர் எப்படி நடத்தப்பட வேண்டுமென்பதற்கான சட்ட நியமங்கள் உண்டு. அப்படியிருக்க, சட்டத்தைப் பாதுகாக்கின்றவர்களே சட்ட விரோதமாக நடந்துள்ளார்கள். ஒரு ஆயருக்கு இப்படியென்றால், சாதாரண அப்பாவி மக்கள் எவ்வாறு நடத்தப்படுவார்கள் என்பதைச் சொல்லித்தெரிய வேண்டியதில்லை. - இவ்வாறு (6ஆம் பக்கம் பார்க்க)

## வீரவணக்கம்

### ‘குன்றன்’

(யாழ்ப்பாணம்)

மணலாறு மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட வெடிவிபத்தொன்றில் குன்றன் (சுப்பிரமணியம் குமாரவேல் புளியங்பொக்கணை, கிளிநொச்சி) என்ற போராளி வீரமரணமடைந்துள்ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமதுவீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## கணவனும் மனைவியும் தீ விபத்தில் காயம்

(யாழ்ப்பாணம்)

தவறுதலாக குப்பிவிளக்குத் தட்டுப்பட்டதால் கணவனும் மனைவியும் தீக்காயங்களுக்கு உள்ளாயினர். மனைவி கவலைக்கிடமான நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொழும்புத்துறை ஆண்டிகைச்சேர்ந்த எ. ராஜீ என்ற (வயது 21) கணவனும், ஆர். சூரியா என்ற (வயது 24) மனைவியுமே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தோர் ஆவர். மனைவி உடல் முழுவதும் எரிகாயங்களுக்கு உள்ளாகியுள்ளார். (லோ)

## திருப்பழுகாமத்தில் கைதுசெய்த 150 பேர் மீது இராணுவம் சித்திரவதை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள திருப்பழுகாமம் பகுதியைச் சுற்றி வளைத்த சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் அப்பகுதியில் 150 பொதுமக்களை கைது செய்து கடுஞ்சித்திரவதைக்கு உள்ளாக்கியபின் ஒன்பது பேரைத் தடுத்து வைத்துள்ளனர்.

இச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது:

நேற்றுமுன்தினம் காலை ஆறுமணியளவில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியபோரதீவு இராணுவ முகாமில் இருந்து வெளியேறிய சிறிலங்கா இராணுவத்தினரும் ரெலோ குழுவினரும் இணைந்து திருப்பழுகாமம் பகுதியைச்சுற்றிவளைத்து 150 பொதுமக்களைக் கைது செய் ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளியின் தேவையைப் பூர்த்தி செய்த அதிகாரிகள் இடைநிறுத்தம்

(கொழும்பு)

மஹர சிறைச்சாலையில் வைக்கப்பட்டிருந்த பிரபல முக்கியவஸ்தர் ஒருவரை நீதிமன்றத்திற்கு அவரது சொந்தக் காரிலேயே அழைத்துச் சென்றமைக்காகவும், நீதிமன்றத்தில் அவரது தேவைகளை நிறைவு செய்தமைக்காகவும் இரு சிறைச்சாலை அதிகாரிகள் வேலையில் இருந்து இடை ( 6 ஆம் பக்கம் பார்க்க)

## நெல்லிப்பளை உ. அ. அ. பிரிவில் மீட்பு நிதி செலுத்த ஏற்பாடு

தமிழீழ மீட்புநிதி செலுத்த ஒப்புதலளித்த தெல்லிப்பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தோர் பங்களிப்பு செய்வதற்கு வசதியாக 30-3-91சனிக்கிழமைமீட்புநிதி திரட்ட ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. பங்களிக்க விரும்புவோர் சிற்றாலை வினால் அவர்களுக்கென அறிவிக்கப்பட்ட இடங்களில் குறிப்பிட்ட நேரத்தில்தமது பங்களிப்பைச் செலுத்தலாம் (6 ஆம் பக்கம் பார்க்க)

## எமது மாணவர் கல்வியை நாம் வெறுக்கவில்லை

# மண்ணை, மக்களை நேசிக்காத கல்வியையே நாம் வெறுக்கிறோம்

## மகேந்திரராசா

(மானிப்பாய்)

எமது மாணவர்கள் கல்வி கற்பதைநாம்வெறுக்கவில்லை மண்ணையும், மக்களையும், எமது தியாகங்களையும்நேசிக்காத கல்வியையேநாம்வெறுக்கிறோம் எமக்குத் தேவையானது தேசப்பற்றை, தேசிய உணர்வைத் தூண்டக் கூடிய கல்வியே இதனையே நாம்பல தடவை வலியுறுத்தினோம் இதனை மக்கள் தவறாகப் புரிந்து கொண்டு நாம் கல்வியை நிறுத்தப்போகிறோம் என நினைத்து எம்மை கல்வி



விரோதிகளாகக்கணித்தனர் இவ்வாறு நேற்று முன்தினம் காலை ஒன்பது மணியளவில் மானிப்பாய் இந்துக்கல்லூரியில் நடைபெற்ற வலிகாமப் பகுதி ஆசிரியர்களுக்கானகலந்துரையாடலில்கலந்துகொண்டு உரையாற்றிய விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு சோ. மகேந்திரராசா (மாத்தயா) அவர்கள் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்து உரை நிகழ்த்துகையில் கடந்த காலங்களில் நாம் விட்ட மிகப்பெரிய தவறு ஆசிரியர்களையும் போராட்டத்தில் இணைத்துக் கொள்ளாமையே தற்போது தமிழீழத்திலுள்ள ஆசி (6 ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் பரவலாக மேஜர் செங்கதிர், சிந்துவின் அஞ்சலிக் கூட்டங்கள்

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் சிரேஷ்ட பிரசாரப் பொறுப்பாளர் மேஜர் செங்கதிரினதும், போராளி சிந்துவினதும் அஞ்சலிக் கூட்டங்கள் நேற்று யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம் பெற்றன

வலிகாமம் பிரிவில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட பிரசாரப் பொறுப்பாளர் திரு. ஆஞ்சநேயர், சிரேஷ்ட உறுப்பினர் மூர்த்தி வலிகாமம் பிரிவு அரசியல் பொறுப்பாளர் திரு ஐயர் (6ஆம் பக்கம் பார்க்க)

## ஒரே நேரத்தில் இரு வீடுகளில் ஒரு லட்சம் கொள்ளை

(செ. த. மை)

இருபாலை ‘பிரேமானந்’ வீதியில் உள்ள இரு வீடுகளில் ஒரே இரவில் சுமார் ஒரு லட்சம் ரூபா நகைகள் திருடப்பட்டுள்ளன.

நேற்று முன்தினமிரவு இக்கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றது.

திருமதி துரையப்பா இன்னாச்சிப்பிள்ளை என்பவர் வீட்டில் 16 பவுன் நகைகளும் திருமதி தவமணி நாகரத்தினம் என்பவர் வீட்டில் 2 பவுன் சங்கிலியும் திருடப்பட்டுள்ளது வீட்டுக்காரர் ஆழ்ந்த நித்திரையிலிருந்த சமயம் இத்திருட்டுக்கள் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கோப்பாய் பிரதேசப் பொறுப்பாளரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

## காரைநகரில் குண்டுவீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகர் முகாம் சுற்றாடலில் நேற்று விமானக் குண்டுத் தாக்குதல்இடம்பெற்றது. சிவோர் பகுதியில் தங்கியுள்ள இராணுவத்தினருக்கு பாதுகாப்பளிக்கும் முகமாக நேற்று மதியம் ஒரு மணியளவில்இந்த தாக்குதல் இடம் பெற்றதாக எமக்கு அங்கிருந்து கிடைத்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன. (லோ)

## பத்து நாட்கள் ஆகியும் உணவு விநியோகம் இல்லை

பத்து நாட்களுக்கு மேலாகியும் 6ஆம் கட்ட உலர் உணவு விநியோகம் யாழ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களினால் மேற்கொள்ளப்பட வில்லையெனத் தெரிவிக்கப் படுகிறது

6ஆம் கட்ட பாதிக்கப்பட்டவர்களுக்கான உலர் உணவு விநியோகம்இம்மாதம் 15ஆம் திகதி ஆரம்பமாகுமென செயலகத்தில் நடைபெற்றகூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது அறிந்ததே.

பத்து நாட்களுக்கு மேலாகியும் விநியோகம் ஆரம்பிக்கப்படாததால் அகதிகளும், தொழில்வாய்ப்பு இழந்தவர்களும் பாதிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது (21)

**வரிவிளம்பரம்**

### SLEAS

SLEAS- பரீட்சைக்குரிய நுண்ணறிவு, பொது உளச் சார்பு, இரவித்தல் நூல்கள் எல்லாப்பிரபல புத்தகசாலைகளிலும் கிடைக்கும். ஆக்கியோன்: க. குணராசா எம். ஏ. (-1204)

### தேவை

பாவித்த சம்போ, ஒடிக்கலோன், Gum (கம்), Vicks போத்தல், பவுடர் டப்பா போல் பொயின்ட் பேனா, சனிக்கிழமைகளில் மட்டும் காலை 9-00 மணிமுதல் 12-00 மணி வரை வாங்கப்படும்; எஸ்: சத்தியன், 55, மணிக்கூட்டு வீதி, கொழும்புத்துறை ஸ்ரூடியோ பின்புறம், யாழ்ப்பாணம்; (B 2169)


## முடிவுத்திகதியில் மாற்றம்

(கொழும்பு)

பொது எழுதுநர் சேவையின் 1 ஆம் வகுப்பிற்குப் பதவி உயர்வு வழங்குதல் தொடர்பாகப் பொது நிர்வாக சுற்று நிருபம் இல.44-30 இல்08 ஆம் பந்தியின் நியதிகளின்படி விசேட அறிக்கைகள், இணைந்த சேவைகள் பணிப்பாளரிடம் கிடைக்க வேண்டிய திகதியில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

விசேட அறிக்கைகள் இணைந்த சேவைகள் பணிப்பாளருக்குக் கிடைக்க வேண்டிய திகதி 30.4.1991 என சகல அரசாங்க அதிபர்களுக்கும், திணைக்களத் தலைவர்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.


நானாட்டான் பகுதி ப. நோ. கூ. சங்கம்

## பொது முகாமையாளர் பதவி வெற்றிடம்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள்**

(அ) கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 7ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவியொன்றில் மூன்று (3) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்கப் பணியாளர் 8ஆம் சம்பளத் திட்டத்தில் முகாமை / மேற்பார்வை மட்ட பதவியொன்றில் 6 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிச் சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகளுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் நான்கு (4) வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது

(இ) கூட்டுறவுப் பணியாளர் தராதரப் பத்திர உயர் பிரிவு சான்றிதழ் / க. பொ. த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டப் பதவியொன்றில் ஆறு வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

வயதெல்லை: 25 – 50 வருடம்

சம்பள விகிதம்: 1305 — 2370 / 60 / 4 — 75 / 11

(இத்துடன் கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பிற படிகளும் வழங்கப்படும்.)

விண்ணப்பப் படிவங்கள் 10-04-1991க்கு முன்னர் இரு ஒழுக்கச் சான்றிதழ்கள், கல்விச் சான்றிதழ்கள், பிறப்புச் சான்றிதழ் ஆகியவற்றின் பிரதியுடன் தலைவர், நானாட்டான் பகுதி ப. நோ. கூ. சங்கம், முருங்கன் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும்.

குறிப்பு: மன்னார் மாவட்ட விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை உண்டு.

(ஒப்பம்) செ. மரியாம்பிள்ளை
தலைவர்.

நானாட்டான் பகுதி,
ப. நோ. கூ. சங்கம்,
முருங்கன்

(B- 2194)


## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 26

1987ஆம் ஆண்டு பலாலிமுகாம் சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட நேரடி மோதலின் போது வீரமரணமடைந்த

**மனோ** (நாகலிங்கம் மனோரஞ்சன் - புங்குடுதீவு)

1988ஆம் ஆண்டு திரியாயில் இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் போது வீரமரணமடைந்த

**மூர்த்தி** (செல்லையா ஜீவராசா - திரியாய்)

இதே ஆண்டு வன்னிப்பகுதியில் இயக்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது இனம் தெரியாதவர்களின் தாக்குதலினால் வீரமரணமடைந்த

**கிறேசி**
**அனில்**
**விக்டர்**

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

மாவீரர்களே!
ஏக்கங்களுக்கும் - விடிவுக்கும்
ஆயுதம் ஏந்தி புறப்பட்டீர்கள்
இதுவே வழியென்று
துணிவு கொண்டீர்கள்
நீங்கள் சிந்திய - இரத்தம்
இந்த மண்ணில்
ஆயிரம் காவியம்
படைக்கும்.

(கவிதை - டானியல் சவுந்தரன்)

- விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

(B-2159)


## வடமராட்சி மக்கள் சார்பில்

# அன்னை பூபதியை

## எமது இதயத்தால் நினைவு கூருகிறோம்.

**திலீபன் கூல் பார்**
வல்வெட்டித்துறை
உரிமையாளர்:
மு. பிறேம்குமார்

**சதா பொண்ஸ்**
மாலி சந்தி, அல்வாய்
உரிமையாளர்:
மு. சுந்தரலிங்கம்

**கவிதா றேடர்ஸ்**
27, பிரதான வீதி,
பருத்தித்துறை
உரிமையாளர்:
சி. சத்தியமூர்த்தி



**பைரவன் றேடர்ஸ்**
கிராமக் கோட்டுச் சந்தி,
புலோலி.
உரிமையாளர்:
பாலகிருஸ்ணன்

**குயிலநாதன் ஸ்ரோர்ஸ்**
நாவலடி, அல்வாய்.
உரிமையாளர்:
க. இராசரட்ணம்

**உதயன் புத்தகசாலை**
பிரதான வீதி, பருத்தித்துறை.
உரிமையாளர்;
து. குலசிங்கம்

மக்கள் தினசரி "ஈழநாதம்" விற்பனையாளர்கள்

# இந்திய ராணுவம் வெளியேறிய ஓர் ஆண்டை நினைவு கூரும் முகமாக...

இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களை விட்டு வெளியேறி (24-03-1990) ஒரு வருடம் கடந்து விட்டது. இந்த இந்திய இராணுவத்தின் வெளியேற்றத்துடன் இலங்கைத் தமிழர் அரசியல் வரலாற்றின் ஒரு சகாப்தம் முடிவுற்றது எனலாம். இந்நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் இந்திய இராணுவத்தின் செயற்பாடு நினைவு கூருவது பொருத்தப்பாடு உடையதாகும்.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 29 ஆம் திகதி ஏற்பட்ட ராஜீவ் காந்தி - ஜே. ஆர். ஜெயவர்த்தனா கைச்சாத்திட்ட இந்தியா - சிறிலங்கா சமாதான ஒப்பந்தத்தின் அடிப்படையில் அந்நிரவே 'அமைதிப்படை' என்ற போர்வையில் இந்திய இராணுவம் தமிழ்ப் பிரதேசங்களில் காலடி வைத்தது.

சிறிலங்கா இராணுவத்தினருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் ஏற்படுவதைத் தடுப்பதே அமைதிப் படையின் நோக்கம் என வெளிப்படையாகக் கூறிக் கொண்டாலும், ஒப்பந்தச் சரத்துக்களை நிறைவேற்றும் ஒரு கருவியாகவே இந்திய இராணுவம் கொண்டு வரப்பட்டது.

இலங்கைத் தமிழர் விவகாரம் தொடர்பாக ஏற்பட்ட இந்திய - சிறிலங்கா ஒப்பந்தம் இலங்கைத் தமிழரின் உரிமைகளைப் பேணுவதற்குப் பதிலாக இந்திய நலனைப் பேணுவதாகவே இருந்தது. இதனை விடுதலைப் புலிகள் ஆரம்பம் முதலே தெரிவித்து வந்தாலும் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணும் நோக்கில் தமது ஆயுதங்களின் ஒரு பகுதியையும் ஒப்படைத்தார்கள்.

ஆனால், இந்தியா ஆரம்பம் முதலே விடுதலைப்புலிகளை அரசியல், இராஜதந்திர இராணுவ ரீதியில் ஒழித்துக் கட்டும் நோக்கிலேயே இயங்கியது. இதன் காரணமாக விடுதலைப் புலிகள் மீது இந்தியா வலிந்து ஒரு யுத்தத்தைத் திணித்தது. விடுதலைப் புலிகளுக்கு இப்போர் தவிர்க்க முடியாத ஒரு வரலாற்று நியதியாயிற்று.

விடுதலைப் புலிகளுடன் போர் ஆரம்பிக்கும் போது இந்தியா இது தனக்கொரு வியட்னாமாக அமையும் என எதிர்பார்க்கவில்லை. விடுதலைப் புலிகளின் போர்த் தந்திரங்களையும், மன வலிமையையும், குறைத்து மதிப்பிட்ட இந்திய உளவுத்துறையினரும், இராணுவத் துறையினரும் யுத்தம் தொடங்கிச் சிறிது காலத்திற்குள்ளேயே தாம் வெல்ல முடியாத யுத்தத்தில் ஈடுபட்டுள்ளோம் என்பதைப் புரிந்து கொண்டனர்.

விடுதலைப் புலிகளை அழிப்பதற்கு இந்தியா தனது பெரும்பலத்தை பிரயோகித்ததெனலாம். நித்திகைக்குள காட்டுப் பகுதியில் நடந்த சண்டையில் அதிநவீன எம். ஐ 25 ரக ஹெலிகப்டர்களும் ரீ- 72 ரக டாங்கிகளும் பயன்படுத்தப்பட்டதோடு இந்தியாவின் புகழ்பெற்ற விசேட கரிக்காசப்படைப் பிரிவுகளும் பயன்படுத்தப்பட்டன. ஆனால் இந்தியா இழப்புக்களைச் சந்திக்க வேண்டி இருந்ததே ஒழிய இலாபம் எதுவும் அடையவில்லை. இதனால் இந்திய இராணுவ வீரர்களுக்கு விரக்தி நிலையும் சோர்வும் தான் அடைந்தார்கள்.

ஒருபுறம் இந்தியா இராணுவ ரீதியாக விடுதலைப் புலிகளை அழிக்க போரை நடத்திக் கொண்டு மறுபுறத்தில் அரசியல் ரீதியாக ஒழிக்குவதற்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது. இதற்காக தமிழ் மண்ணை விட்டு ஓடிய தமிழ்க் குழுக்களைக் கொண்டு வடக்கு கிழக்கு மாகாண சபைக்கு ஒரு பொம்மை அரசாங்கத்தையும் நிறுவியது. ஆனால் இந்தியாவின் நடவடிக்கைகளினாலும் ஆயுதக் குழுக்கள் மீது மக்களுக்கு இருந்த வெறுப்பின் காரணமாகவும் இந்தியாவின் இந்த முயற்சியும் கைகூடவில்லை.

விடுதலைப் புலிகளிடம் இந்தியா அடைந்த தோல்வியை இந்திய இராணுவ ஒப்பரேசன்களை வழிநடத்திய கொமாண்டோ ரெஜிமென்ட் அதிகாரியான லெப். கேணல் ஹர்கெல்விதுர் கூற்றே வெளிக்காட்டியுள்ளது. அவர் இலங்கையை விட்டு வெளியேறும் போது "இப்படியானதொரு துரதிர்ஷ்டமான நிகழ்வு இனி என்றுமே மனதுதாய்நாட்டிற்குநிகழக் கூடாது. குறைவான இழப்புகளுடன் நாம் நிறையப் படிப்பினையைப் பெற்றுள்ளோம்" எனத் தெரிவித்தார்.


அதே வேளை இந்தியாவுக்காகப் போரிட்டார்களோ அவர்களோ இந்தியாவிற்காக அனுதாபப்படவில்லை. மாறாக தமது சேவை முடிந்ததும் இந்திய இராணுவம் வெளியேற வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தனர்.

விடுதலைப் புலிகளுடனான போரினால் இந்திய இராணுவம் நீண்டதொரு அனுபவத்தைப் பெற்றது. இந்தியாவின் இராணுவ வரலாற்றில் இது போன்றதொரு நீண்ட மோதலுக்கும் இழப்புக்கும் இந்தியா முகம் கொடுக்கவில்லை. அதே வேளை இந்தியாவின் வெளியுறவுக் கொள்கைக்கு, நேரு காலத்தில் சீனாவுடனான வெளியுறவுக் கொள்கைக்குக் கிடைத்த தோல்வியின் பின் இவ்வாறானதொரு தோல்வி கிடைக்கவுமில்லை.

இந்த நிலையில் தமிழ்ப் பிரதேசங்களில் இருந்து இந்திய இராணுவம் வெளியேறுவது தவிர்க்க முடியாததாகியது. அதே வேளை விடுதலைப் புலிகளின் வீரம் செறிந்த, உலகின் நான்காவது பெரிய இராணுவத்திற்கெதிரான போராட்டம் உலகில் அடக்கப்பட்ட மக்களுக்கானகுறிப்பாக தெற்காசிய மக்களுக்கான, சிறந்ததொரு படிப்பினையாகவும் புத்துணர்ச்சி ஊட்டுவதாகவும் இருந்த தென்றால் மிகையாகாது.




தமிழீழ மண்ணில் காலடி பதிக்குமுன் தலைவரை விடுவிக்கக் கோரி இந்திய இராணுவத்தினருக்கு வீதியை மறித்து நிற்கும் தமிழீழ மக்கள்.




இந்திய விமானப்படையிலுள்ள ரஷ்யத் தயாரிப்பான எம். ஐ 25 ரக ஹெலிகொப்டர்




இலங்கை - இந்திய உடன்பாட்டைத் தொடர்ந்து இடம்பெற்ற உத்தியோக பூர்வ ஆயுதக் கையளிப்பு.



சங்கானை நோக்கி வந்த இந்திய இராணுவத்தின் டாங்கி சேதமாக்கப்பட்டது.



போரில் கைதிகளாக்கப்பட்ட இந்திய இராணுவத்தினரை நல்லெண்ணம் காட்டி விடுதலை செய்தனர்.



சிறிலங்கா அரசால் வரவழைக்கப்பட்ட இந்திய இராணுவம் தமிழர் தாயகத்திலிருந்து இழப்புகளுடன் வெளியேற்றம்

## அம்பாலங்கோட பாடசாலையில் 6 மாணவர்கள் 2 ஆசிரியர்கள்

அம்பாலங்கொட டேல்தூவ கனிஷ்ட பாடசாலையில் ஆறு மாணவர்களின் பெயர்கள் தான் வரவு இடாப்பில் உள்ளன. மூன்று வகுப்புகள் உள்ள இப் பாடசாலையில் இரண்டு ஆசிரியர்கள் கடமையாற்றுகின்றனர்.

இப்பாடசாலை 1918 இல் ஆரம்பிக்கப்பட்டது. இங்கு ஆண்டுகள் 1, 3, 4 வகுப்புகள் மாத்திரமே உள்ளன. ஆண்டு2 இப்பாடசாலையில் தற்போது இல்லை 1ஆம் ஆண்டில் 2 மாணவர்களும், 3ஆம் ஆண்டில் ஒரு மாணவனும், 4ஆம் ஆண்டில் 3 மாணவர்களும் உள்ளனர்.

கடமையாற்றும் இரு ஆசிரியர்களில் ஒருவர் பயிற்றப்பட்ட பட்டதாரி. மற்றவர் பயிற்றப்பட்ட ஆசிரியர்.

# அஞ்சலி

கலங்கரை விளக்காக ஒளியேற்றி நின்றாய்
கரைசேர நினைப்போர்க்கு வழியாகி நின்றாய்
தமிழ் ஈழமண்ணிற்கு வளம் சேர்த்து நின்றாய்
வளம் மேலும் சிறக்கவென்றா உரமாகி விட்டாய்?

முளையாக
9 - 9 - 1936



விதையாக
23 - 3 - 1991

## பேராசிரியர் சோ. கந்தையா

B.Sc. (Hons.) Ph.D (London)

(பீடாதிபதி:- விவசாயபீடம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், கிளிநொச்சி, முன்னாள் துறைத்தலைவர், சிரேஷ்ட விரிவுரையாளர் தாவரவியற்துறை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)

"உங்கள் வழி ஒன்றுதான் எங்கள் வழி என்று நாம், நேர்மை ஒருநாளும் தவறாமல் நடைபோடுவோம்."

- இயக்குநர், அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்

UNIVERSAL
FOR GOD AND COUNTRY

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம்.

[B-2200]

### ❀ சிந்தனைக்கு ❀

சொல்லுவார் சொன்னால்
கேட்பாருக்கு மதி என்ன?

— தமிழர் முதுமொழி


# ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 26-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## எவ்வாறானாலும் இலக்கு பொதுமக்களே

விமானத் தாக்குதல்கள் தொடர்பான பொது மக்களின் புகார்களை அந்தந்த இடங்களிலேயே விசாரித்து அதற்கான நடவடிக்கைகளை அப்பொழுதே மேற்கொண்டு வருகின்றோம். ''எமது இலக்கை'' நோக்கி விமானங்கள் குறிபார்த்த போதிலும் இலக்கில் இருந்து சுமார் 125 யார் தொலைவுப் பகுதியிலேயே குண்டுகள் போடப்படுகின்றன. பொதுமக்களின் நலனைக் கருத்திற்கொண்டேதான் இவ்வாறு செயற்படுகின்றோம் என்று பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா பத்திரிகையாளர் ஒருவரின் கேள்வி ஒன்றிற்குப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் இல்லாத இடங்கள் - அதாவது புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகள் அல்லது சிறிலங்கா இராணுவத்தினர் ஆக்கிரமிக்க முயற்சிக்கும் பகுதிகள் என்பனவற்றிலேயே சிறிலங்கா விமானப்படை விமானங்கள் பெருமளவில் குண்டு வீச்சுத் தாக்குதலை மேற்கொள்கின்றமை வழமையாகும். அவ்வாறு தாக்கி அழிக்கப்பட்டவற்றிற்கு யாழ் நகரமும், வல்வெட்டித் துறையும், அதைச் சூழவுள்ள பகுதிகளும் சிறப்பு உதாரணங்களாகும். இப்பகுதிகள் புலிகளின் பூரண கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளாகும். இவ்விடயம் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் செயலாளருக்கும், அவர் பேட்டி அளிக்கும்போது அங்கு கூடியிருந்த பத்திரிகையாளருக்கும் அச்செய்திகளை வெளியிட்ட பத்திரிகைகளுக்கும் நன்கு தெரியும்.

இந்நிலையில், விமானக்குண்டுவீச்சிற்கு உள்ளாகும் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேச மக்களையும், அவர்களின் புகார்களையும் எவ்வாறு சிறிலங்கா அதிகாரிகளால் விசாரணை செய்ய முடியும்? எவ்வாறு நடவடிக்கை எடுக்க முடியும்? அதிகாரிகள் தமது வாயில் வந்த எவற்றையாவது சொல்லிக்கொண்டு போனால், அதை பத்திரிகையாளரும் கேட்டுக்கொண்டு இருப்பதானால், ஏன் செய்தியாளர் மாநாட்டிற்குச் செல்கின்றார்கள். அரச தரப்பு வானொலியும், தொலைக்காட்சியும் சொல்பவற்றைக் கேட்டுவிட்டு இருக்கலாமே?

'எமது இலக்கை'' நோக்கி விமானங்கள் குறிபார்த்த பொழுதும் பொதுமக்களின் நன்மை கருதி 125 யார் தொலைவில்தான் குண்டுகளைப் போடுகின்றோம். இதில் ''எமது இலக்கு'' என எதைச் சிறில்ரணதுங்கா குறிப்பிடுகின்றார் என்பது குழப்பமாகியுள்ளது.

யாழ் குடாநாடு மிகவும் குடித்தொகை மிக்க ஒரு பகுதி. அங்கு தொடர்ச்சியான குடியிருப்புகள் அமைந்துள்ளன. இந்நிலையில் எமது இலக்கில் இருந்து 125 யார் வெளியில் குண்டு வீசுகின்றோம் என்றால் புலிகளின் நிலையில் இருந்து நூற்றியிருபத்தைந்து யார் வெளியில் உள்ள குடியிருப்புகள் மீது குண்டு வீசுகிறோம் என்பது பொருளா? அல்லது பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் கூற்றுப்படி பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக நூற்றி இருபத்தைந்து யார் தொலைவில் குண்டு வீசப்படுகின்றன என்றால் இலக்குகள் பொதுமக்களின் நிலைகள் என்றல்லவா ஆகிவிடும்.

இந்நிலையில், செயலாளரின் கூற்றுப்படி எங்கு குண்டு வீசப்பட்டாலும் அவரின் இலக்கு பொது மக்களாகவே உள்ளது என்பதே உண்மையாகும்.

பாதுகாப்புச் செயலாளரின் கூற்று ஒருபுறம் இருக்கட்டும். அதைக் கேட்டுக்கொண்டு இருந்த செய்தியாளர்களின் எண்ணங்களை எவ்வாறு குறிப்பிடுவது?

1987 இல் தலைவர் பிரபாகரன் ஆயுதங்களை நாம் ஒப்படைக்கத் தயாராக இருக்கின்றோம் என்று பத்திரிகையாளர் மாநாட்டில் கூறியபோது முழு ஆயுதங்களையும் வழங்குவீர்களா? உங்கள் சொந்த ஆயுதத்தையும் வழங்குவீர்களா? எனத் துருவித் துருவிக் கேட்ட கொழும்புப் பத்திரிகையாளர்களின் மண்டையில் இது மட்டும் ஏன் ஏறவில்லை?

உண்மையில், இது அவர்கள் மண்டையில் ஏறாத விடயமல்ல. அவர்களின் இனவாத எண்ணங்கள் அவர்களை இக்கேள்விக் கணைகளைத் தொடுக்க விடவில்லை.

இலங்கையின் இன்றைய அரசியலுக்கு சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் எவ்வாறு காரணமோ அதேபோன்று சிங்களப் பேரினவாதப் பத்திரிகைகள் பலவும் காரணமாகும். இவ்வளவு நெருக்கடியின்பின்பும் தமது போக்கை அவர்கள் விடுவதாக இல்லை. அரசியல்வாதிகள் அதிகாரப் போட்டிகளுக்காகப் பேசிய இனவாதத்தைவிட்டொழிக்க தயாராகினாலும், வர்த்தகத்திற்காக அவற்றைவிடப் பத்திரிகைகள் இன்றும் தயாராகவில்லை.

ஈராக் விமானங்களை தடுத்து வைத்த

## ஈரானின் நடவடிக்கைக்கு அமெரிக்க அதிபர் புஷ் வரவேற்பு

(தெகிரான்)

வளைகுடாப் போரின் போது ஈராக்கால் ஈரானில் விடப்பட்ட 150 போர் விமானங்களையும் பொது மக்கள் விமானமொன்றையும் ஈரான் பிடித்து வைத்துள்ளது.

அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளின் தாக்குதலுக்கு உள்ளாகாதவாறு இந்த விமானங்கள் ஈராக்கால் ஈரானுக்கு அனுப்பப்பட்டிருந்தது.

ஈரானின் இந்த நடவடிக்கையினை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ்புஷ் வரவேற்றுள்ளார்.

முன்னதாக வளைகுடாப் போர் முடிவுற்றதும் இந்த விமானங்களை விடுவதாக ஈரான் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும்.

## நிர்வாகத்தை விஸ்தரிக்க விசேட நடவடிக்கைக் குழு

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதியில் சமூக நிலைமையினை ஏற்படுத்தி சிவில் நிர்வாகத்தை விஸ்தரிப்பதற்காக விசேட நடவடிக்கை குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாம்.

சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசாவின் பணிப்புரைக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரதேசத்தில் சிவில் நிர்வாக நடவடிக்கைகளை நூற்றுக்கு நூறு சதவீதம் ஏற்படுத்துவது இந்தக் குழுவின் நோக்கமாகும் என்றும் கூறப்படுகிறது.

## 'தேச பிரேமிகள்' இழக்குக் காடுகளில்

(கொழும்பு)

ஜனதாவிமுக்திப்பெரமுனையின் ஆயுதப் பிரிவான தேச பிரேமிகள் (டி.ஜே.வி) இழக்கு மாகாணக் காடுகளில் தஞ்சம் புகுந்துள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி ஒருவர் நேற்று முன்தினம் தெரிவித்தார். பொலிஸ் வலையிலிருந்து தப்புவதற்காகவே இவர்கள் வனவாசம் மேற்கொண்டுள்ளார்கள்.

திருக்கோணமலை மீன்பிடிவாடிகளில் இருந்து பொலிசாரினால் கைது செய்யப்பட்ட ஜே.வி.பியினர் தெரிவித்த தகவலையடுத்தே இழக்கு மாகாணக் காடுகளில் அவர்கள் இருக்கிறார்கள் என்ற செய்தி வெளிவந்துள்ளது.

## யப்பானில் இராணுவரீதியாக பெருமளவு மாற்றங்கள்

(டோக்கியோ)

சர்வதேசஅரங்கில் கெடுபிடி யுத்தத்தின் பின்னர் ஏற்பட்ட மாற்றங்களைச் சமாளிப்பதற்கு ஜப்பானில் இராணுவரீதியில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன என்று ஜப்பானியப் பிரதமர் ரொசிக்கிகைபூ தெரிவித்துள்ளார்.

கடந்த சனியன்று டோக்கியோவில் நடைபெற்ற பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய ஜப்பானிய பிரதம மந்திரி ரொசிக்கிகைபூ நவீன பாதுகாப்புத்திட்டத்தை மேற்கொள்ள இருப்பதாகவும் தெரிவித்தார்.

## குவைத் மனிதவாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை

வளைகுடா யுத்தம் முடிவிற்கு வந்துள்ளபோதிலும் குவைத் இன்னும் மனித வாழ்க்கைக்கு ஏற்றதாக இல்லை என வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத் தலைவர் டேவிட் சொய்சா தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் குவைத் சென்று திரும்பிய இவர் குவைத் வான் வெளியில் கரும்புகை மண்டலம் சூழ்ந்துள்ளது என்றும், குடிநீர், மின் சாரவசதிகள் இல்லை என்றும், மலசலகூட குழிகள் வீதிகளில் காணப்படுகின்றன என்றும், கட்டடங்கள், வீடுகள் மிகச் சிலவே மிஞ்சியுள்ளன என்றும் தெரிவித்தார்.

குவைத்தை மனித வாழ்விற்கு ஏற்றதாக மாற்ற இன்னும் சிறிது காலமாகும் என்றும் அவர் தெரிவித்தார்.

பிரபல சூதாட்ட நிலையம்

## பொலிசாரால் முற்றுகை வெளிநாட்டு கரன்சிகள் மீட்பு

(கொழும்பு)

பம்பலப்பிட்டி பகுதியிலுள்ள பிரபல சூதாட்ட நிலையமொன்றை பொலிசார் முற்றுகையிட்டபோது அங்கிருந்து வெளிநாட்டு கரன்சிகள் உட்பட சுமார் 15 இலட்சம் ரூபா ரொக்கம் கைப்பற்றப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமை டி.ஐ.ஜி.பி. உடுகம்பொல தலைமையிலான விசேட நடவடிக்கை பணியகம் மேற்கொண்ட முற்றுகையின் போதே இந்த கண்டுபிடிப்புகள் மேற்கொள்ளப்பட்டதாம்.

இது தொடர்பாக சிங்கப்பூர் வாசியொருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளாராம். இவருக்கு உடந்தையாக இரு நேபாள வாசிகளும் செயல்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாம்.

## 25 அரசியற் கட்சிகள்

உள்ளூராட்சித் தேர்தலில் 25 அரசியல் கட்சிகள் போட்டியில் ஈடுபடுகின்றன என தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இலங்கையில் 29 அரசியல் கட்சிகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்றும் இதில் 25 கட்சிகள் தேர்தலில் போட்டியிடுகின்றன என்றும் ஆணைக்குழு அறிவித்தது.

10 மாநகர சபைகள், 33 பட்டின சபைகள், 237 பிரதேச சபைகளுக்கான தேர்தல் நடைபெறவுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் எல்லா இடங்களிலும் போட்டியிடுவதாக அறிவித்துள்ளன.

அன்னை பூபதி ஞாபகார்த்த

### பொது அறிவுப் போட்டிக்கான விண்ணப்பம்

1. பெயர்:-
2. முழுப்பெயர்:-
3. பாடசாலை:-
4. பிறந்த திகதி:-
5. கல்வி கற்கும் வகுப்பு:-
6. வதிவிட முகவரி:-
7. பிரிவு:-

கட்டணம்:- ரூபா 3/-

..........................................................

அதிபர் / பொறுப்பாசிரியர் ஒப்பம்

05-04-1991 அன்று 15 வயதிற்கு உட்பட்டவர்கள் கீழ்ப்பிரிவாகவும், அதற்கு மேற்பட்டவர்கள் மேற்பிரிவு எனவும் பத்திரத்தை பூர்த்திசெய்க.

விண்ணப்பித்த சகல மாணவர்களுக்கும் கொத்தணி மட்டத்தில் ஒரு பரீட்சை நிலையத்தில் 12-04-91 அன்று பரீட்சை நடைபெறும்.

19-04-91 அன்று விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் இறுதிப் பொதுக் கூட்டத்தில் பெறுமதிமிக்க பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

அதி கூடிய பரிசில்களைப் பெறும் பாடசாலைக்கும், அதிகூடிய எண்ணிக்கையான மாணவர் பங்கு கொண்ட பாடசாலைக்கும் பரிசு வழங்கப்படும்.

★ விண்ணப்ப முடிவு திகதி:- 05-04-91

விடுதலைப்புலிகள் மாணவர் இயக்கம்

(உங்கள் பிரிவு விடுதலைப் புலிகள் மாணவர் இயக்க அலுவலகங்களில் ஒப்படைக்கவும்)

## பலலட்சம் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர் கொர்பசேவை பதவி விலக கோரி

# சோவியத்தில் வேலை நிறுத்தம்

(மொஸ்கோ)

சோவியத் ஜனாதிபதி கொர்பசேவைப் பதவி விலகுமாறு கோரியும், சம்பள உயர்வு கோரியும் சோவியத் குடியரசுகளைச் சேர்ந்த பல இலட்சம் நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த வேலை நிறுத்தத்தினால் சோவியத் பொருளாதாரம் பெரும் நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அதேவேளை சோவியத் பிரதமமந்திரி வேலை நிறுத்தத்தைக் கைவிட்டு சோவியத் பொருளாதாரத்தைப் பாதுகாக்க வேலைக்குத் திரும்புமாறு விடுத்த கோரிக்கையையும் சுரங்கத் தொழிலாளர்கள் புறக்கணித்துள்ளார்கள்.

இந்த நிலையில் சுரங்கத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்திற்கு ரஷ்ய சம்மேளனக் குடியரசின் ஜனாதிபதி யெல்சின் ஆதரவு தெரிவித்துள்ளார். இதன்காரணமாக சோவியத் ஜனாதிபதி கொர்பசேவிற்கும் யெல்சினுக்கும் இடையிலான மோதல் அதிகரித்துள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நாட்டில் தோன்றியுள்ள நெருக்கடி நிலைமையைத் தணிக்க உடனடியாக சோவியத் சம்மேளனக் குடியரசின் பாராளுமன்றத்தைக் கூட்டுமாறு தீவிரவாதக் கம்யூனிஸ்டுகள் கோரிக்கை விடுத்துள்ளார்கள்.

இந்தக் கூட்டத்தில் கொர்பசேவைப் பதவியில் இருந்து நீக்க தீவிரவாத கம்யூனிஸ்ட்டுக்கள் முயலலாம் எனச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள நிலக்கரிச் சுரங்கத் தொழிலாளர்களில் மூன்று இலட்சம்பேர் யெல்சினுக்கு ஆதரவாக உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## விமானத்தாக்குதல் குறித்து விசாரணை; நடவடிக்கை

(கொழும்பு)

விமானத்தாக்குதல் பற்றிய பொதுமக்களின் முறைப்பாடுகளை விசாரிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன விமானத் தாக்குதல்கள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகளை அந்த இடங்களிலேயே விசாரித்து நடவடிக்கைகளை உடனேயே மேற்கொண்டு வருவதாக பாதுகாப்பமைச்சின் செயலாளர் மேஜர் ஜெனரல் சிறில் ரணதுங்கா தெரிவித்தார். செய்தியாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு பதிலளித்தார். நிருபர்: வல்வெட்டித்துறை குண்டு வீச்சு சம்பந்தமாக பொதுமக்களின் புகார் தொடர்பாக விசாரணைகள் முடிவுற்றதா?

செயலாளர்: விசாரணைகள் மேற்கொண்டு அவ்வப்போதே நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. வல்வெட்டித்துறை குறித்து என்னால் இப்போது ஞாபகப்படுத்த முடியாது.

## பெங்களூரில் விமானவிபத்து 28 விமானப்படையினர் பலி

(பெங்களூர்)

பெங்களூரில்நேற்றுக்காலை இடம்பெற்ற விமான விபத்தொன்றில் விமானப்படையைச் சேர்ந்த 28 பேர் இறந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விமானப்படை பயிற்சிக்குச் சென்றுகொண்டிருந்த பயிற்சி விமானம் ஒன்றே இவ்வாறு விபத்திற்கு உள்ளானது.

இறந்துபோனவர்களில் 25 பேர் பயிற்சி பெறுபவர்கள் என்றும் மற்றைய மூவரும் அதிகாரிகள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

விபத்து நடந்த இடத்தினை கர்நாடக முதலமைச்சர் பங்காரப்பா சென்று பார்வையிட்டார்.

### வவுனியா தெற்கு அரச ஊழியர்

## ஏப்ரல் 10 ஆம் திகதிக்குமுன்னர் கடமைக்குத் திரும்ப கோரிக்கை

(கொழும்பு)

வவுனியா தெற்கு சிங்கள உதவிஅரச அதிபர் பிரிவிலும், வவுனியா தெற்கு தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள அரசாங்க, கூட்டுத்தாபன ஊழியர்கள் அனைவரும் அடுத்த மாதம் 1ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாகக் கட்டாயமாகக் கடமைக்குச் சமுகமளிக்க வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட கால எல்லைக்குள் வேலைக்குச் சமூகம் கொடுக்காத ஊழியர்கள் தமது பதவியிலிருந்து தாமாகவே விலகியவர்களாகக் கருதப்படுவார்கள் என்று பொது நிர்வாகமாகாணசபைகள், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவிக்கின்றது.

ஜூன் மாதம் 12ஆம் திகதிக்கும் இம்மாதம் 31ஆம் திகதிக்கும் இடைப்பட்டகாலத்தில் கடமைக்கு திரும்பாதவர்களின் லீவு விசேட லீவாகக் கணிக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### "இரத்ததானம்" விவிலிசை

(அரியாலை)

"இரத்ததானம்" விவிலிசை நிகழ்ச்சி நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் இடம் பெற்றது. நேற்று முன்தினம் நாயன்மார்கட்டு ஆயுர்வேத வைத்தியசாலை புனரமைப்புக்குழு ஏற்பாடு செய்திருந்த நிர்வாக விஸ்தரிப்பு பற்றிய கூட்டத்திலேயே இந்நிகழ்ச்சி இடம் பெற்றது.

வைத்திய சாலையை நிர்வகிப்பதற்கான யாப்பும் இக்கூட்டத்தில் அங்கீகாரம் பெற்றது.

### இந்தியாவின் சனத்தொகை 84 கோடி 39 லட்.

(டில்லி)

புதிய கணக்கெடுப்பின் உத்தேச மதிப்பின்படி இந்தியாவின் மொத்த குடித்தொகை 84,39,30,867 பேர் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதில் ஆண்கள் 43,75,97929, பெண்கள் 40,6332932 ஆவர்.

### பல்கலை

மருத்துவம், பொறியியல் மற்றும் வர்த்தகம், கலை உட்பட மொத்தம் 79 மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதி பெற்றுள்ளனர். யாழ் மாவட்டப் பாடசாலைகளுடன் ஒப்பிடும்போது இது ஒரு சாதனையாக கருதப்படுகிறது.

### ஆயர்

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதோடு, பாரபட்சமற்ற விசாரணை ஒன்றை மேற்கொள்ளும்படியும் மேற்படி கழகத்தின் செயலர் ஏ சந்தியாப்பிள்ளை ஜனாதிபதி ஆர். பிரேமதாஸாவைக் கோரியுள்ளார்.

மகஜரின் பிரதி பாப்பரசரின் கொழும்பில் உள்ள பிரதிநிதிக்கும் அனுப்பப்பட்டுள்ளது.

### மன்னை

ரியர்களில் ஒரு சிலரே தமது பங்களிப்பை சிறிய அளவில் செலுத்தி வருகின்றனர். ஆசிரியர்கள் அனைவரும் இனியாவது தங்கள் பூரண ஒத்துழைப்பை போராட்டத்துக்கு வழங்க வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு புத்தகங்களில் கூறப்பட்டுள்ள தவறான வரலாறுகளைப் புகுத்துவதைத் தவிர்த்து உண்மையான எமது வரலாறுகளை அவற்றுடன் ஒப்பிட்டுக்கூறவேண்டும் அப்பொழுதான் மாணவர்கள் உண்மை நிலைமைகளைப் புரிந்து கொள்வார்கள் சரியான வரலாற்றைத் தெரிந்துகொள்வார்கள்.

விரைவில் கல்விமறுசீரமைப்புக்கானகுழு ஒன்று நியமிக்கப்படும் எனவும் பாடசாலை மாணவர்கள் மத்தியில்பொது அறிவுப்போட்டிகள் நடாத்தப்பட்டு பரிசில்கள்வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (ச)

### ஹிஸ்புல்லா இடைநிறுத்தம்

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அங்கத்துவத்திலிருந்து மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்றஉறுப்பினர் எம். எல். ஏ எம். ஹிஸ்புல்லாவை இடை நிறுத்திருப்பதாக முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் ஜனாப் ஹிஸ்புல்லாவிற்கு அறிவித்துள்ளார்.

### மத்திய கல்லூரியில் அஞ்சலி

(செ. தா. மை.)

மன்னார் - சிலாவத்துறை சிறிலங்கா இராணுவ முகாம் மீது விடுதலைப்புலிகள் மேற்கொண்ட தாக்குதலின்போது வீரமரணமடைந்த யாழ். மத்திய கல்லூரி மாணவர்களாகிய இரத்தினசிங்கம் மகேஸ்வரன் நேதாஜி), நடேசபிள்ளை செந்தூரன் (காஸ்ட்ரோ) - மாணவர் தலைவன்) ஆகிய இருவருக்கும் மேற்படி கல்லூரி மாணவர்கள் கொடியேற்றி தமது வீர வணக்கத்தையும், அஞ்சலியையும் செலுத்தினர்.

வீரமரணமடைந்த இந்த மாணவ போராளிகளுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி பிரசுரம் ஒன்றையும் கல்லூரி மாணவர்கள் வெளியிட்டுள்ளனர்.

### இனவிகிதாசார தேர்தல்

(கொழும்பு)

இன விகிதாசார அடிப்படையில் நடத்தப்படும் முதலாவது தேர்தல், எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலாகும் வாக்காளர் ஒருவர் தனக்குக் கொடுக்கப்பட்ட மூன்று விருப்பத் தெரிவு வாக்குகளையும் ஒரே வேட்பாளருக்கே போடக்கூடிய வசதி முதல் முறையாக இந்தத் தேர்தலிலேயே வழங்கப்படவுள்ளது.

### மேஜர்

உட்பட பல பிரமுகர்கள் அஞ்சலி உரை நிகழ்த்தினர்.

நெல்லியடி ம. ம வித்தியாலயத்திலும், வேலணை மகா வித்தியாலயத்திலும், பட்டுவில் மகாவித்தியாலயத்திலும், கரவெட்டி விக்கினேஸ்வரா மகாவித்தியாலயத்திலும் அஞ்சலிக் கூட்டங்கள் இடம் பெற்றன. இக்கூட்டங்களில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பிரமுகர்கள் பலர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். (க)

### தேவையை

நிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்கள்.

கொழும்பில் பம்பலப்பிட்டிப் பகுதியில் வீடொன்றில் பிரஸ்தாப கைதியும் சிறைச்சாலை அதிகாரிகளும் இருந்தபோது திடீர் சோதனை நடத்திய டி. ஐ ஜி. உடுகம்பொல தலைமையிலான விசேட விசாரணைப் பிரிவுப் பொலிஸார் இவர்களைக் கைதுசெய்துள்ளனர். காரில் இருந்து 40,000 ரூபா பணமும் மீட்கப்பட்டதாம்.

### தெல்லிப்பளை

மேற்படி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து வாழ்வோர் 30-03-91 சனிக்கிழமை காலை 10 30 மணிக்கும் பிற்பகல் 2-00 மணிக்கும் இடையில் தெல்லிப்பளை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதிப்பொறுப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### கைதுசெய்த

துள்ளனர்.

கைதான பொதுமக்களைக் கடுஞ் சித்திரவதைக்குள்ளாக்கிய பின்னர் திருப்பழுகாமம் பாடசாலை அதிபர் உட்பட ஒன்பது பேரைத் தடுத்து வைத்துள்ளனர்

திருப்பழுகாமம் காஞ்சிபுரம் பாடசாலை அதிபரான ஐந்து பிள்ளைகளின் தந்தையான திரு பொன்னையா தங்கராசா (55) தந்தையா கணேசன் (18, சிவலிங்கம் இரவீந்திரன் 24), சிவலிங்கம் கருணாகரன் 22), சாமித்தம்பி புண்ணியன் (19) இரண்டு பிள்ளைகளின் தந்தையான வல்லிபுரம் செல்வராசா (30 முத்தன் இருமைராசா (20, இரண்டு பிள்ளைகளின் தந்தையான வினாசித்தம்பி சிங்கன் (28 ஆகியோரே மேற்படி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (மு)

# உலர் உணவு விநியோகம் புதிய அளவீடுகளும் விலையும்

(யாழ்ப்பாணம்)

நிவாரண அட்டைகளுக்குச் சுழற்சி முறையில் மண்ணெண்ணை வழங்கப்படவிருக்கின்றது. நிவாரண விநியோகத்தின் வழமையான அளவீட்டின்படி ஒரு குடும்பத்திற்கு 1/4 லீற்றர் மண்ணெண்ணை வழங்கப்படுவதற்குச் சுமார் 56,000 லீற்றர் மண்ணெண்ணை தேவைப்படுகின்றது. ஆனால் கப்பலில் எடுத்துவரப்படும் மண்ணெண்ணை போதுமானதாக இல்லாதபடியால் சுழற்சி முறையில் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. புதிய நிவாரண அட்டவணை பின்வருமாறு:

| உலருணவு | 1 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 2 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 3 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 4 அங்கத்தவர் எடை | ரூ. ச. | 5 அங்கத்தவர் எடை | ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அரிசி | 3 கி | 39 45 | 5 கி | 65 75 | 6 கி | 78.90 | 7 கி | 92 05 | 10 கி | 131.50 |
| மாவு | 1 கி | 13 25 | 2 கி | 24 50 | 2 1/2 கி | 30 65 | 3 கி | 36 75 | 3 கி | 36 75 |
| சீனி | 1/2 கி | 12 90 | 1 கி | 25 75 | 1 கி | 25 75 | 1 1/2 கி | 38 85 | 2 கி | 51.50 |
| பயறு | 1/2 கி | 15.00 | 3/4 கி | 22 50 | 3/4 கி | 22 50 | 1 கி | 30 00 | 1 1/4 கி | 37.50 |
| ஹைலன் பால்மா | | | | | 1 பக் | 38 00 | 1 பக் | 38.00 | 1 பக் | 38.00 |
| எண்ணெய் | 1/4 லீற் | 2 10 | 1/4 லீற் | 2 10 | 1/4 லீற் | 2.10 | 1/4 லீற் | 2 10 | 1/4 லீற் | 2.10 |
| | | 81.70 | | 140 60 | | 197.90 | | 237.75 | | 297.35 |
| மீதி இல்லைறைப் பொருள்கள்/ சவர்க்காரம் | | 2.30 | | 13 40 | | 12.10 | | 14.25 | | 17.65 |
| | | 84.00 | | 154 00 | | 210 00 | | 252 00 | | 315.00 |

மேலும் தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் உணவு விநியோகத்தில் லக்ஸ்பிறே பால்மா விநியோகிக்கப்படமாட்டாது என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.